**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | Village: வேப்பத்தூர் |
| Preliminary Register : CC.116/2023 | Age :40 |
| Sessions : | Taluk :திருவிடைமருதூர் |
| Deposition of Witness for : LW-1/ PW-1 | |
| Name :முத்து | Religion : |
| Father's/Husband's Name : சந்துரு | |
| Nationality : Indian | |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 27.02.2026.**

சாட்சியை திருவிடைமருதூர் தலைமைக் காவலர் திரு. வீரபாண்டியன் என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜர் இல்லை. அவரது தரப்பில் 317 கு.வி.மு.ச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் வேப்பத்தூர் தச்சத்தெருவில் வசித்து வருகிறேன். டிரைவராக வேலை செய்து வருகிறேன். எதிரி ஜெயசீலனை தெரியும். 27.06.2021 மதியம் 3.30 மணியளவில் என் சித்தப்பா செந்திலுக்கும் எதிரி ஜெயசீலனுக்கும் இடையே சண்டை நடந்தது. அந்த சண்டை நடந்து முடிந்து அன்றைய தினம் இரவு 8.30 மணியளவில் காந்தி வீதி யில் என் சித்தப்பா வீட்டு அருகே நின்றுகொண்டிருந்தபோது என் சித்தப்பா வீட்டில் தான் இருந்தார். நான்

எதிரியை பார்த்து சண்டை வேண்டாம் என்று கூறினேன். அதற்கு எதிரி என்னைப் பார்த்து நீ என்ன சப்போட்டா வரியா என்று தேவிடியா மகனே என்று அசிங்கமாக திட்டி எதிரி கையில் வைத்திருந்த உடைந்த பாட்டிலை வைத்து எனது வலது பக்க விலா எலும்பிலும் எனது வயிற்று பகுதியிலும் இடது மார்பு பகுதியிலும் என்னை தாக்கியதில் எனக்கு இரத்தக் காயம் ஏற்பட்டது. என்னை திட்டி எத்தனை பேர் வந்தாலும் கொண்றுவிடுவேன் என்று மிரட்டிவிட்டு சென்றுவிட்டார். (சாட்சிக்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் வலது பக்க விலா எலும்பிலும்,வயிற்று பகுதியிலும், இடது மார்பு பகுதியிலும், இருந்த காயத்தழும்புகளை நீதிமன்றத்தில் நேரடியாக காட்டினார்.) காயம்பட்ட என்னை என் அம்மா ஜெயலெட்சுமி சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் மூலம் கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார். அங்கு சிகிச்சையில் இருந்தபோது திருவிடைமருதூர் போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்கு மூலம் வாங்கினார்கள். அந்த புகார் வாக்குமூலம் என்னிடம் காட்டப்படுவது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா. ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் குறித்து போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் கும்பகோணம் அரசு மருத்துமனையில் வைத்து. எந்த போலீசார் என்று பெயர் தெரியவில்லை. போலீசார் விசாரணையில் எனது சித்தப்பாவிற்கும் இந்த வழக்கு எதிரிக்கும் மது போதையில் பிரச்சனை ஏற்பட்டதாக சொன்னேன் என்றால் சரிதான். எதிரி வீட்டிற்கு பக்கத்தில் உள்ள தெருவில் நான் வசித்து வருகிறேன். என் சித்தப்பாவும் எதிரியும் நண்பர்கள் என்றால் பேசிக்கொள்வார்கள். சம்பவ இடத்திலிருந்து கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு அரை மணி நேரத்தில் இருசக்கரவாகனத்தில் சென்று விடலாம்

என்றால் சரிதான். மருத்துவர் என்னிடம் சம்பவத்தன்று இரவு 9 மணி அளவில் விவரம் கேட்டார். நான் தான் சொன்னேன். போலீசார் மருத்துவமனையில் என்னை விசாரித்த பின்னிட்டு என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எதிரி கையில் வைத்திருந்த உடைந்த பாட்டிலை வைத்து எனது வலது பக்க விலா எலும்பிலும் எனது வயிற்று பகுதியிலும் இடது மார்பு பகுதியிலும் என்னை தாக்கியதில் எனக்கு இரத்தக் காயம் ஏற்பட்டது என்ற விவரத்தை நான் போலீசார் விசாரித்தபோது சொன்னேன். என்னை திட்டி எத்தனை பேர் வந்தாலும் கொண்றுவிடுவேன் என்று எதிரி மிரட்டிவிட்டு சென்றுவிட்டார் என்ற விவரத்தை போலீசார் விசாரித்தபோது சொன்னேன். எதிரியால் எனக்கு எந்தவித காயமும் ஏற்படதவில்லை என்றாலும் எதிரிக்கும் எனது சித்தப்பாவிற்கும் ஏற்பட்ட பிரச்சனையை மனதில் வைத்து எதிரிக்கு எதிராக நான் பொய்யாக புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும் எனது சித்தப்பாவும் சேர்ந்து தான் எதிரியை அடித்தோம் என்றால் சரியல்ல. எதிரி எந்தவித குற்ற சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்றாலும் எதிரியால் எனக்கு காயம் ஏற்படவில்லை என்றாலும் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

*<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.</u>*

*<u>மறுவிசாரணை இல்லை.</u>*

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**Sd/- P. Rangeswari,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**